செ. கு. எண்: 058 நாள் : 01.08.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 1.8.2015

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், அரியூர் மஜ்ரா, குப்பம் கிராமம், அருள்மிகு பொன்னியம்மன் திருக்கோவிலில் 21.5.2015 அன்று நடைபெற்ற சுவாமி தேர் திருஉலாவின் போது, மின் கம்பம் தேரின் மீது பட்டு மின்சாரம் பாய்ந்ததில், தேரை இழுத்துச் சென்றுக் கொண்டிருந்த அரியூர் குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரத்தினம் என்பவரின் மகன் ஜெயபிரகாஷ், திரு. சின்னப்பா என்பவரின் மகன் குமரேசன், திரு. கண்ணன் என்பவரின் மகன் கோவிந்தராஜ் மற்றும் மேல்மருவத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**